புதிய பாடத்திட்டம்

தமிழ் செயல்நூல்

தரம் – 02

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மற்றும் பாடநூலை தழுவி தயாரிக்கப்பட்டது.

தொகுப்பு:

எம்.எச்.எம்.ஸஜீர்

முஹம்மட் அகடமி

கல்முனை

முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்



புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் தரம் - 02 இல் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களுக்கான தமிழ் செயல்நூலை வெளியிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியுலகு முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் புதிய கல்விக் கொள்கைகளும், கல்விச் சீர்திருத்தங்களும் வெளிவந்த வண்ணமே இருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே தரம் - 01 இலிருந்து புதிய கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வடிப்படையில் இவ்வருடமும் தரம் - 02ற்கு புதிய கல்வித்திட்டத்தின் கீழ் அவர்களது தமிழ்ப்பாடமும் அமைந்துள்ளது.

இதற்கான ஆசிரியர் கைந்நூல் வெளியிட்ட போதும் மாணவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் எதுவும் இல்லாது பழைய நூல்களையே படிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே மாணவர்களுக்கு ஆசிரியர் கைந்நூலை தழுவி அதில் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீடுகளின் அடிப்படையில் பல மேலதிக பயிற்சிகளையும் இந்நூல் கொண்டுள்ளது. இந்நூல் தவணைப் பரீட்சை வினாத்தாள்களையும் கொண்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


மேலும் இந்நூல் சகல மாணவர்களுக்கும் பயன் கொடுக்கும் எனவும், ஆசிரியர்களின் மேலதிக கணிப்பீடுகளுக்கு உதவும் எனவும் எதிர்பார்க்கின்றேன். இதன் மூலம் மாணவர்கள் சிறந்த தேர்ச்சிகளைப் பெற்று மேலும் மேலும் தேர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.


எம். எச். எம். ஸஜீர்

நூலாசிரியர்


01. சுயமாகப் பேசுவதற்கு சந்தர்ப்பமளிக்குக.

02. கீழே உள்ள இரண்டு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்







03. பின்வரும் உருக்களுக்கு நிறந்தீட்டுவோம்.



04. சரியான முறைகளில் அமர்ந்து பென்சில் பிடித்து எழுதும் முறைகளை அறிவோம்





05. உயிர்மெய் எழுத்துக்களை நெடுங்கணக்கு வரிசைப்படி எழுதுவோம்.

க

ச

ட

ண

த

ந

ப

ம

ய

ர

ல

வ

ழ

ள

ற

ன

06. அகர வரிசைப்படி சொற்களை எழுதுவோம்.

அம்மா ஆடு இலை ஈட்டி உரல் ஊதி

எருது ஏணி ஐந்து ஒன்று

ஓலை ஔவை

பின்வரும் சொற்களை அகர வரிசைப்படி எழுதுக.

01) அன்பு, ஒட்டகம், ஊசி, ஐந்து, இறகு, ஓலை, ஆலயம், உப்பு, ஈட்டி, எலி, ஏணி, ஒளவையார்

02) கட்டில், கொடு, கூடு, கை, கிளி, கோடு, காப்பு, குயில், கீற்று, கெடுதி, கேடு, கௌபி

03) சாயம், சோறு, சூரியன், சைகை, சிரிப்பு, சொண்டு, சட்டி, சீப்பு, செருப்பு, சௌபாக்கியம், சுட்டி, சேறு

04) பாடம், பீர்க்கு, பூட்டு, பெட்டி, பிரம்பு, பட்டம், புகை, பேடு, பொன், பௌர்னமி, போக்கு, பை

05) மின், மாசி, முகம், மணி, மூக்கு, மெட்டி, மையல், மொக்கு, மேளம், மீன், மோதிரம், மௌனம்

06) தாகம், துட்டு, தண்ணீர், தினம், தென்னை, தீமை, தூக்கம், தொட்டில், தேகம், தையல், தோடு, தௌபி

07. பின்வரும் பட அட்டைகளின் பெயர்களை வாசிப்போம்.



பின்வரும் அட்டைகளில் விடுபட்ட படங்களின் பெயர்களை கூறுங்கள்.














08. “இயற்கை அழகை இரசித்து மகிழ்வோம்” பாடத்திலுள்ள இயற்கைப் பொருட்களின் பெயர்களைக் கூறுவோம்.



09. படத்திலுள்ள பிராணிகளை கண்டுபிடித்து அவற்றின் பெயர்களை எழுதி வாசிப்போம்.




10. பின்வரும் பறவைகளின் பெயர்களை எழுதி வாசிப்போம்.


















11. பின்வரும் பழங்களின் பெயர்களை எழுதி வாசிப்போம்.




















12. பின்வரும் காய்கறிகளின் பெயர்களை எழுதி வாசிப்போம்.














13. பின்வரும் கதையை செவிமடுத்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கதை - அன்பு

கண்ணன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவன் வீடு கடற்கரை வீதியில் உள்ளது. அவனது வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி ஆகியோர் உள்ளனர். அவன் எல்லோரிடமும் அன்பாக இருப்பான்.

ஒருநாள் அவன் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போது மழை பெய்து கொண்டிருந்தது. நாய்க் குட்டி ஒன்று மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அதனால் நடக்க முடியவில்லை. அவன் அருகில் உள்ள கடை ஒன்றில் சிறிய பெட்டி ஒன்றை வாங்கினான். அப்பெட்டிக்குள் குளிரால் நடுங்கும் நாயை வைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவனது அக்காவின் உதவியுடன் நாயைக் காப்பாற்றினான்.

அந்த நாய்க்குட்டி அழகாக இருந்தது. அதனை வீட்டிலேயே வளர்த்தான். அவன் எங்கு சென்றாலும் வாலை ஆட்டிக் கொண்டு அவன் பின்னாலேயே செல்லும். அந்த நாய் அவன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தது. கண்ணனும் நாய்க்குட்டியும் இணைபிரியாத நண்பர்களாயினர்.

01) கண்ணன் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறான்? .....

02) அவனது வீடு எங்குள்ளது? .....

03) அவனது வீட்டில் யார் யார் உள்ளனர்? .....

.....

04) அவன் எல்லோரிடமும் எவ்வாறு இருப்பான்? .....

05) அவன் பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் போது என்ன நடந்தது?

.....

06) மழையில் நனைந்தது எது? .....

07) சிறிய பெட்டியை எங்கு வாங்கினான்? .....


08) யாரின் உதவியுடன் நாயைக் காப்பாற்றினான்? .....

09) அந்த நாய்க்குட்டியை எங்கு வளர்த்தான்? .....

10) அந்த நாய் எதனை ஆட்டிக் கொண்டு அவன் பின்னால் செல்லும்?

.....

14. படத்தைப் பார்த்து கதை கூறுவோம்.




இக்கதையில் வரும் சொற்களை எழுதுவோம்.

படத்தைப் பார்த்து கதை கூறுவோம்.

படக்கதை

ஆமையும் முயலும்

கதைக்கரு: வி.என்.எஸ்.உதயசந்திரன் சித்திரம்: டி.டி.குமாரி



© பதிப்புரிமையுடையது

கதைப்படங்களில் வரும் சொற்களை எழுதுவோம்.

15. பின்வரும் எழுத்துக்களில் தொடங்கும் சொற்களை எழுதுங்கள்.

கா

தா

பா

வா

சி

நி

மி

கு

நீ

பெ

16. குறில் நெடில் சொற்களை அறிவோம்.

















பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான நெடில் சொற்களை எழுதுவோம்

குறில்	நெடில்
மலை	
குடை	
முட்டை	
முளை	
எடு	
தடி	
நிலம்	
குரை	
கொடி	
மின்	

பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான குறில் சொற்களை எழுதுவோம்

குறில்	நெடில்
	பானை
	காட்டு
	பாட்டு
	பால்
	ஆடி
	கால்
	வானம்
	கோடு
	சீலை
	நாடு

பொருத்தமான நெடில் சொற்களைத் தொடர்புபடுத்துவோம்.

01)	கல்	பாடம்
02)	பனை	கால்
03)	மலை	பானை
04)	படம்	மாலை
05)	வனம்	கூடை
06)	குடை	வானம்

17. செயல்களைக் கூறுவோம்.

















18. ஒருமை பன்மைச் சொற்களை அறிந்து கொள்வோம்.



ஒருமை	பன்மை
முயல்	முயல்கள்
வண்டு	வண்டுகள்
இலை	இலைகள்
பூனை	பூனைகள்
தொப்பி	தொப்பிகள்

பன்மைச் சொற்களை எழுதுவோம்.

ஒருமை	பன்மை
ஆடு	
பழம்	
எலி	
கதிரை	
பெட்டி	
நண்டு	
மேசை	


ஒருமைச் சொற்களை எழுதுவோம்.


ஒருமை	பன்மை
	மரங்கள்
	பூக்கள்
	யானைகள்
	பானைகள்
	வாளிகள்
	வீடுகள்
	பாய்கள்


பொருத்தமான பன்மைச் சொற்களை இணைப்போம்.


01)	கொப்பி	புலிகள்
02)	வண்டி	நத்தைகள்
03)	புலி	கொப்பிகள்
04)	ஓலை	வண்டிகள்
05)	நத்தை	வாளிகள்
06)	வாளி	சதுரங்கள்
07)	சதுரம்	மாடுகள்
08)	மாடு	ஓலைகள்


19. படம் பார்த்து வாக்கியம் எழுதி வாசிப்போம்.


























20. ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து கொள்வோம்.



பூ - இல்லம்



கை - கரம்



காது - செவி



வீடு - இல்லம்

அம்மா - தாய்

அப்பா - தந்தை

பழம் - கனி

நிலா - சந்திரன்

கடல் - ஆழி

காடு - வனம்

ஒளி - வெளிச்சம்

உணவு - ஆகாரம்

தீ - நெருப்பு

வானம் - ஆகாயம்

நாடு - தேசம்

ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவோம்

01) பழம் - ……..

02) காது - ……...

03) பூ - ……

04) அம்மா - ……

05) வயல் - ……

06) அழகு - ……

07) வீடு - ……

08) காற்று - ……..

09) பழம் - ……..

10) அன்பு - ……..

ஒத்தகருத்துச் சொற்களை இணைப்போம்.

01)	அப்பா	இல்லம்
02)	அம்மா	ஆகாரம்
03)	உணவு	ஆழி
04)	சந்திரன்	தந்தை
05)	வீதி	நெருப்பு
06)	வீடு	தாய்
07)	தீ	நிலா
08)	ஒலி	பாதை
09)	கடல்	சண்டை
10)	ஒளி	குன்று
11)	போர்	வெளிச்சம்
12)	மலை	சத்தம்

21. "என் அம்மா" எனும் பாடத்தை வாசித்து அம்மா உங்களுக்கு உதவி செய்யும் விதங்கள் மூன்று எழுதுக.



01) .....

02) .....

03) .....

"என் அப்பா" எனும் தலைப்பில் வாக்கியம் எழுதுவோம்.



01) .....

02) .....

03) .....

22. எதிர்க்கருத்துச் சொற்களை அறிந்து கொள்வோம்.

காலை - மாலை

இரவு - பகல்

உள்ளே - வெளியே

பெரிது - சிறிது

சூடு - குளிர்

முன் - பின்

அழு - சிரி

மேலே - கீழே

இளமை - முதுமை

ஒளி - இருள்

சுகம் - துக்கம்

நன்மை - தீமை

வெற்றி - தோல்வி

சரி - பிழை

மூடு - விரி

இலாபம் - நட்டம்

எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுவோம்.

01) மழை - .....

02) வா - .....

03) நன்மை - .....

04) பின் - .....

05) குளிர் - .....

06) பின் - .....

07) சிரி - .....

08) கீழே - .....

09) வெளியே - .....

10) இரவு - .....

எதிர்க்கருத்துச் சொற்களை இணைப்போம்.

01) இரவு	கீழே
02) காலை	திற
03) மேலே	பகல்
04) சூடு	இல்லை
05) பெரிது	தோல்வி
06) சரி	குளிர்
07) மூடு	தீமை
08) ஆம்	பிழை
09) நன்மை	சிறிது
10) வெற்றி	மாலை

23. எதிர்ப்பாற் சொற்களை அறிந்து கொள்வோம்.

பின்வரும் பட அட்டையில் தரப்பட்டுள்ளோரை ஆண், பெண் என வேறுபடுத்துவோம்.



ஆண்	பெண்

அப்பா	-	அம்மா
தாய்	-	தந்தை
பாட்டி	-	பாட்டன்
மாணவன்	-	மாணவி
செல்வன்	-	செல்வி
அரசன்	-	அரசி

நண்பன்	-	நண்பி
சிறுவன்	-	சிறுமி
பாடகன்	-	பாடகி
அழகன்	-	அழகி
புதல்வன்	-	புதல்வி
ராஜா	-	ராணி

ஆண்பால் சொல்லுக்குரிய பெண்பால் சொல்லை எழுதுவோம்.

01) தம்பி - .....

02) பாட்டன் - .....

03) அப்பா - .....

04) சிறுவன் - .....

05) மகன் - .....

06) மாணவன் - .....

07) மாமா - .....

08) அரசன் - .....

09) பெரியப்பா - .....

10) பேரன் - .....

பெண்பால் சொல்லுக்குரிய ஆண்பால் சொற்களை எழுதுக.

01) செல்வி - .....

02) தலைவி - .....

03) அழகி - .....

04) பாட்டி - .....

05) முதல்வி - .....

06) அவள் - .....

07) மாணவி - .....

08) மருமகள் - .....

24. "எங்கள் நல்ல வீடு" எனும் பாடத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



01) எங்கள் வீடு எப்படிப்பட்டது?

.....

02) எவற்றால் வீடு கட்டப்படுகிறது?

.....

03) எதனூடாக வீட்டிற்கு காற்று வீசும்?

.....

04) எதிலிருந்து வீடு எம்மை காக்கிறது?

.....

இடைவெளி நிரப்புக.

01) நல்ல நல்ல வீடு

..... வாழும் வீடு

02) கல்லும் மண்ணும் .....

கலந்து கட்டும் வீடு.

03) நல்ல யன்னல் ஊடே

..... வீசும்

04) கொட்டும் மழையில் எம்மைக் .....

25. பின்வரும் பாடல்களைப் பாடி மகிழுங்கள்.

பட்டம் விடுவோம்

பட்டம் விடுவோம்
பட்டம் விடுவோம்
பாடிப் பாடிப்
பட்டம் விடுவோம்
பட்டம் பட்டம்
பட்டம் பட்டம்

வாத்து

குவாக் குவாக் வாத்து
குட்டைக் கால் வாத்து

தட்டைச் சொண்டு வாத்து
தத்திச் செல்லும் வாத்து

வெள்ளை நிற வாத்து
விரும்பும் அழகு வாத்து

பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய நல்ல பூக்கள்

வெள்ளை நிறப் பூக்கள்
வெற்றி தரும் பூக்கள்

மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்

- வி. என். எஸ். உதயசந்திரன்

பந்து நிலா

நிலா நிலா வா வா
நீயும் நானும் ஆடலாம்

பந்து போல் இருக்கிறாய்
பந்து அடிக்க வா வா

கிண்ணம் போல் இருக்கிறாய்
சோறு உண்ண வா வா

வட்டமாக இருக்கிறாய்
எட்டிப் போக எண்ணாதே

கிட்ட கிட்ட வா
எட்டி முத்தம் தா

- வெ. நல்லதம்பி
நன்றி: கண்ணே பாப்பா.

பாடல்களிலிருந்து தெரிவு செய்த வாக்கியங்களை வாசிப்போம்.

01. பட்டம் விடுவோம்.
02. பாடிப்பாடிப் பட்டம் விடுவோம்.
03. தட்டைச் சொண்டு வாத்து.
04. தத்திச் செல்லும் வாத்து.
05. வெள்ளை நிற வாத்து.
06. மஞ்சள் நிறப் பூக்கள்.
07. சின்னச் சின்னப் பூக்கள்.
08. நிலா நிலா வா வா.
09. பந்து அடிக்க வா வா.
10. சோறு உண்ண வா வா.

பாடலடிகளில் இடைவெளியில் வரவேண்டிய சொற்களை தெரிந்து எழுதுவோம்.

குவாக் குவாக் .....

குட்டைக் ..... வாத்து

தட்டைச் ..... வாத்து

தத்திச் ..... வாத்து

..... நிற வாத்து

விரும்பும் ..... வாத்து

கால்	அழகு	வெள்ளை	செல்லும்

சொண்டு	வாத்து

தரப்பட்ட பாடலடிகளைக் கொண்டு பாடலடியை உருவாக்குவோம்.

பூக்கள்	சின்ன	சிறிய	பூக்கள்	நல்ல	சின்ன

…….

…….

நிறப்	வெற்றி	வெள்ளை	பூக்கள்	தரும்	பூக்கள்

…….

…….

பூக்கள்	நிறப்	மனதைக்	பூக்கள்	கவரும்	மஞ்சள்

…….

…….

பின்வரும் பாடலடிகளில் அடுத்து வரும் அடிகளை எழுதுவோம்.

01) நிலா நிலா வா வா

……..

02) பந்து போல் இருக்கின்றாய்

……..

03) கிண்ணம் போல் இருக்கின்றாய்

……...

04) வட்டமாக இருக்கின்றாய்

……

05) கிட்ட கிட்ட வா

……

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

01) பட்டம் விடுவதற்கு எங்கு செல்வோம்? .....

02) வாத்தின் கால் எவ்வாறனது? .....

03) அதன் சொண்டு எப்படியானது? .....

04) வாத்து எப்படிச் செல்லும்? .....

05) வாத்தின் நிறம் என்ன? .....

06) வெற்றி தரும் பூ எது? .....

07) மனதைக் கவரும் பூ எது? .....

08) பந்து போன்று இருப்பது எது? .....

09) கிண்ணம் போன்று இருப்பது எது? .....

10) நிலா எது போன்று இருப்பதாக கூறப்படுகிறது?

.....

பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்போம்.

01) பட்டம் : .....

02) வாத்து: .....

03) பூக்கள் : .....

04) நிலா : .....

05) பந்து : .....

06) வட்டம்: .....

07) கிண்ணம் : .....

08) வெள்ளை : .....

09) மஞ்சள் : .....

10) அழகு : .....

26. "எறும்பு" எனும் பாடத்தை வாசித்து அதிலுள்ள சொற்களை எழுதுவோம்.

27. பின்வரும் வாக்கிய அட்டைகளை உரத்து வாசியுங்கள்.

அது பூனை
அது கறுப்புப் பூனை
அது சிறிய கறுப்பு பூனை

இது கிளி
இது பச்சைக் கிளி
இது அழகிய பச்சைக் கிளி

அவன் பாடகன்
அவன் சிறந்த பாடகன்
அவன் மிகச் சிறந்த பாடகன்

அது பூனை
அது கறுப்புப் பூனை
அது சிறிய கறுப்புப் பூனை

அது தோட்டம்
அது காய்கறித் தோட்டம்
அது பசுமையான காய்கறித் தோட்டம்


அது முயல்
அது அழகான முயல்
அது மிகவும் அழகான முயல்


பின்வரும் தலைப்புக்களில் எழுதி வாசிங்கள்.

கிளி


மரம்

28. “இன்பமாய் வாழ்வோம்” எனும் பாடத்தை வாசித்து பின்வரும் உடல் உறுப்புக்களின் பெயர்களையும் அதன் பயன்களையும் எழுதுவோம்.





















29. வாக்கிய அட்டவணைக் கீலத்தைப் பார்த்து வாக்கியங்கள் ஆக்குவோம்.


அம்மா	புத்தகம்	வாங்கினார்
அம்மா		வாங்குகிறார்
அண்ணா		வாங்குவார்

காகம்	மரத்தில்	இருந்தது
குயில்		இருக்கிறது
கிளி		இருக்கும்

அம்மா	கோயிலுக்கு	போனார்
அப்பா		போகிறார்
அக்கா		போவார்

அவன்	பாடம்	படித்தான்
நான்		படித்தேன்
தங்கை		படித்தாள்

30. "உணவு உண்போம்" எனும் பாடத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.



01) இங்கு யார் யார் உணவு உண்கின்றனர்?

.....

02) எது போட்டுக் கை கழுவ வேண்டும்?

.....

03) இங்கு குறிப்பிடப்படும் சத்துள்ள உணவு எது?

.....

04) மணிக்கு விருப்பமான உணவு எது?

.....

05) உருண்டை செய்ய தேவையானவை எவை?

.....

06) உருண்டை இனிப்பாக இருக்க காரணம் யாது?

.....

07) இங்கு குறிப்பிடும் பழங்கள் எவை?

.....

08) எவ்வாறு உண்ண வேண்டும் என்று கூறப்படுகிறது?

.....



31. முற்றுப்புள்ளி, காற்புள்ளி இட்டு வாக்கியங்களை உச்சரிப்புடன் வாசிப்போம்.

- வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இடப்படும்.
- வாக்கியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் வந்தால் காற்புள்ளி இடப்படும்.

உதாரணம் :-

- ✓ சிங்கம், புலி போன்றவை காட்டில் வாழ்கின்றன.
- ✓ எங்கள் வீட்டிற்கு மாமா, மாமி, பாட்டி ஆகியோர் வந்தனர்.
- ✓ நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களில் பந்துகள் உள்ளன.

பொருத்தமான இடங்களில் முற்றுப்புள்ளி, காற்புள்ளி இட்டு வாக்கியங்களை வாசிப்போம்.

01) குமார் கோயிலுக்குச் சென்றான்

02) காகம் குயில் கிளி கோழி போன்றவை பறவைகளாகும்

03) காகம் கறுப்பு நிறமுடைய பறவை

04) மழை பெய்தது

05) சந்தையில் மாம்பழம் பலாப்பழம் என்பன வாங்கலாம்

06) ரகுவிடம் பென்சில் அழிறப்பர் என்பன உண்டு

07) சூரியன் மேற்கே மறையும்

08) ஆடு மாடு எருமை புலி என்பன மிருகங்களாகும்

09) பூ மலர்ந்தது


10) அனுலாவிடம் பாதணி தோடு தங்கமாலை உண்டு

32. படங்களின் பெயர்களை இட்டு வாக்கியங்களை மீண்டும் எழுதி வாசிப்போம்.

உதாரணம் :-

 அழகானது

பட்டம் அழகானது.

01)  தின்னும்.


02)  அழகாக ஆடும்.

03)  விளையாடினேன்.

04)  சிரித்தது.

05)  பாய்ந்து செல்லும்.


06)  அடித்தான்.

07)  கடலில் செல்லும்.

08)  சுவையாக இருக்கும்.

09)  பறந்து சென்றது.

10)  காலையில் மலர்ந்தன.

11)  வாசித்தேன்.

12)  வேகமாக ஓடியது.

33. பின்வரும் கதையை செவிமடுங்கள்.

கதை – நரியும் கொக்கும்



ஒரு நாள் நரியும் கொக்கும் சந்தித்துக் கொண்டன. நரி கொக்கிடம் ''கொக்கு அக்கா என்னுடைய வீட்டுக்கு வருவீர்களா? '' என்று கேட்டது. அதற்குக் கொக்கு சற்றுத் தயங்கியபடி ''சரி நாளை வருகிறேன்'' என்று கூறியது.

அடுத்த நாள் கொக்கு நரியின் வீட்டுக்குச் சென்றது. நரி, வட்டமான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. கொக்கு நரியைப் பார்த்தது. நரியார் கொக்கைப் பார்த்து ''கொக்கு அக்கா, பாலைக் குடியுங்கள்'' என்றது.
கொக்கினால் பாலைக் குடிக்க முடியவில்லை. ஏனெனில் அதன் அலகு மிகவும் நீளமானது. நரி அதைப் பார்த்துச் சிரித்தது. ''கொக்கு அக்கா நான் குடிப்பது போன்று குடியுங்கள்'' என்று கூறி பாலை நாக்கால் நக்கிக் குடித்துக் காட்டியது. கொக்கு எதுவுமே சொல்லாமல் கவலையுடன் பறந்து சென்றது.

இன்னொரு நாள் கொக்கு நரியாரைச் சந்தித்தது. ''நரியாரே என்னுடைய வீட்டுக்கு விருந்துண்ண வருவீர்களா? '' என்று கேட்டது.

அதற்கு நரி ''சரி வருகிறேன்'' என்று கூறியது. அடுத்த நாள் நரி கொக்கின் வீட்டுக்குச் சென்றது. கொக்கு தட்டையான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. ''நரியாரே பாலைக் குடியுங்கள்'' என்றது. நரி மகிழ்வுடன் பாலைக் குடித்தது. அதன் பின்னர் கொக்கிடம் எதுவும் சொல்லாமல் நரி வெட்கத்துடன் திரும்பிச் சென்றது. சிறிது தூரம் சென்ற நரி என்னை மன்னிதது விடுங்கள். நான் உங்களுக்கு தீமை செய்தேன். ஆனால் எனக்கு நீங்கள் நன்மை தான் செய்தீர்கள். ''இனிமேல் எவருக்கும் இவ்வாறான தீமையை செய்யமாட்டேன்'' என்று கூறிவிட்டு நரி திரும்பி பார்க்காமல் சென்றது.

கதையிலிருந்து தெரிவு செய்த வாக்கியங்களை வாசிப்போம்.

01) கொக்கு அக்கா வீட்டிற்கு வருவீர்களா?

02) சரி நாளை வருகிறேன்.

03) கொக்கு நரியின் வீட்டிற்குச் சென்றது.

04) நரி வட்டமான தட்டில் பாலை ஊற்றியது.

05) கொக்கு அக்கா பாலைக் குடியுங்கள்.

06) கொக்கினால் பாலைக் குடிக்க முடியவில்லை.

07) கொக்கு அக்கா, நான் குடிப்பது போன்று குடியுங்கள்.

08) கொக்கு எதுவுமே சொல்லவில்லை.

09) கவலையுடன் பறந்து சென்றது.

10) இன்னொரு நாள் கொக்கு நரியைச் சந்தித்தது.

11) என்னுடைய வீட்டிற்கு வருவீர்களா?

12) சரி அக்கா, வருகிறேன்.

13) கொக்கின் வீட்டிற்கு நரி சென்றது.

14) தட்டில் பாலை ஊற்றிக் கொடுத்தது.

15) நரியாரே பாலைக் குடியுங்கள்.

16) நரி மகிழ்வுடன் பாலைக் குடித்தது.

17) அதன் பின்னர், நரி வெட்கத்துடன் திரும்பிச் சென்றது.

18) மீண்டும் கொக்கின் வீட்டிற்கு வந்தது.

19) அக்கா என்னை மன்னித்து விடுங்கள்.

20) நான் உங்களுக்கு தீமை செய்தேன்.

21) நீங்கள் எனக்கு நன்மை செய்தீர்கள்.

22) நான் எவருக்கும் இனிமேல் தீமை செய்ய மாட்டேன்.

பின்வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்யுங்கள்

01) நரியும் ..... சந்தித்துக் கொண்டன.

02) கொக்கு ..... வீட்டிற்குச் சென்றது.

03) நரி ..... ஊற்றி வைத்தது.

04) கொக்கினால் பாலைக் ..... முடியவில்லை.

05) கொக்கு கவலையுடன் ..... சென்றது.

பறந்து	கொக்கும்	நரியின்	பாலை	குடிக்க

01) ஒருநாள் ..... நரியைச் சந்தித்தது.

02) கொக்கின் ..... நரி சென்றது.

03) தட்டு ஒன்றில் பாலை ..... வைத்தது.

04) நரி மகிழ்ச்சியுடன் பாலைக் .....

05) நரி வெட்கத்துடன் ..... சென்றது.

கொக்கு	வீட்டிற்குச்	ஊற்றி	குடித்தது	திரும்பிச்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

01) நரி யார் வீட்டிற்குச் சென்றது? .....

02) நரி எதனுள் பாலை ஊற்றி வைத்தது? .....

03) கொக்கால் ஏன் பாலைக் குடிக்க முடியவில்லை?

.....

04) நரி யாரிடம் மன்னிப்புக் கேட்டது? .....

05) நரி அல்லது கொக்கைப் பற்றிக் கூறுங்கள்?

.....

34. “அன்புள்ளம்” எனும் பாடத்தை வாசித்து இடைவெளியில் வரவேண்டிய சொற்களை எழுதுவோம்.



மரத்திலே கூடு கட்டும்.

..... இடும்.

.....பொரிக்கும்.

பாடுபட்டு ..... தேடும்.

குஞ்சுகளுக்கு ஊட்டி மகிழும்.

“மியாவ் மியாவ்” என்றும் அழைக்கும் குட்டி.



மெல்ல மெல்ல வரும் .....

..... ஓடும் குட்டி.

தாயின் ..... மகிழும் குட்டி.


“.....” என்று அழைக்கும்.



குஞ்சுகள் யாவும் உடன் ஒடும்.

..... மேட்டைக் கிளறும்.

குஞ்சுகளுக்கு இரை .....



வாலைத் தூக்கி .....

“ம்மா” என்று அழைக்கும்.

..... கன்றினைத் தேடும்.

..... அன்பு காட்டும்.

பின்வரும் பிராணிகளின் எழுப்பும் ஒலிகளை எழுதுவோம்.

01) பூனை - ……..

02) கோழி - ……..

03) பசு - ……..

பின்வரும் பிராணிகளின் சிறியவற்றை அழைக்கும் முறையை எழுதுவோம்.

01) குருவி - ……

02) பூனை - ……

03) கோழி - ……

04) பசு - ……

35. விரல் பொம்மை ஆக்குவோம்.



36. பலூன் பொம்மை செய்து பாடல் பாடுவோம்.



நாய்க்குட்டி

சின்னச் சின்ன நாய்க்குட்டி
சிங்கார நாய்க்குட்டி
நன்றி உள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி



- ரா. பொன்னரசன்


நன்றி: பாலும் தேனும்












01) உயிர் எழுத்துக்களை வரிசையாக எழுதுவோம்.



(08 புள்ளிகள்)

02) பின்வரும் சொற்களை அகர வரிசைப்படி எழுதுவோம்

அன்பு, ஒட்டகம், ஊசி, ஐந்து, இறகு, ஓலை, ஆலயம்,
உப்பு, ஈட்டி, எலி, ஏணி, ஔவையார்

…… …… ……

…… …… ……

…… …… ……

…… …… ……

(12 புள்ளிகள்)

03) பின்வரும் எழுத்துக்களில் தொடங்கும் சொற்களை எழுதுவோம்.

அ .....

கா .....

சி .....

கு .....

ம .....

(10 புள்ளிகள்)

04)பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான குறில், நெடில் சொற்களை எழுதுவோம்.

குறில்	நெடில்
மலை	
	வீடு
பலம்	
	கோடு
மின்	

(05 புள்ளிகள்)

05) ஒருமை பன்மைச் சொற்களை எழுதுவோம்.

ஒருமை	பன்மை
ஆடு	
	மரங்கள்
பூ	
	வீடுகள்
பழம்	

(05 புள்ளிகள்)

06) செயல்களைக் கூறுவோம்.



.....




.....

(04 புள்ளிகள்)

07) பின்வரும் படங்களைக் கொண்டு வாக்கியம் அமைக்குக.



.....



.....



.....

(06 புள்ளிகள்)

08) ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவோம்.

மலர் ..... வீடு .....

அம்மா ..... காது .....

கை ..... (05 புள்ளிகள்)

09) எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுவோம்.

காலை..... இரவு.....

உள்ளே ..... பெரிது .....

சூடு .....

(05 புள்ளிகள்)

10) எதிர்ப்பாற் சொற்களை எழுதுவோம்.

அப்பா ..... நண்பன் .....

தாய் ..... சிறுவன் .....


பாட்டி .....

(05 புள்ளிகள்)


11) படத்தை பெயரை இட்டு வாக்கியம் எழுதுவோம்.

01.  வானில் பறக்கும்.

.....

02.  அழகான பறவை.

.....

03.  அடித்து விளையாடினேன்.

.....

04.  மஞ்சள் நிறம்.

.....

05.  மணம் வீசும்.

.....

(10 புள்ளிகள்)

12) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுவோம்.

(. , ?)

01. பந்து அடித்தான்

02. மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

03. இதை எழுதியவர் யார்

04. நான் வாசித்தேன்

05. பென்சில் கொப்பி புத்தகம் என்பன வாங்கினேன்

(05 புள்ளிகள்)

13) பின்வரும் பாடல்களை பூர்த்தி செய்வோம்.

01. கல்லும் மண்ணும் ……..
கலந்து கட்டும் வீடு.

02. குவாக் குவாக் வாத்து
……. கால் வாத்து

03. வெள்ளை நிறப் பூக்கள்
…….. தரும் பூக்கள்

04. கிண்ணம் போல் இருக்கிறாய்
…….. உண்ண வா வா

05. மஞ்சள் நிறப் பூக்கள்
……. கவரும் பூக்கள்

(10 புள்ளிகள்)

14) அம்மாவைப் பற்றி இரண்டு வாக்கியம் எழுதுங்கள்.

……

……

(05 புள்ளிகள்)

15) பார்த்து எழுதுவோம்.

ஆசிரியர் சொற்படி நடப்போம்

(05 புள்ளிகள்)

01) பின்வரும் அறிவித்தல்களை வாசிப்போம்.

அறிவித்தல் - 1

நாளை பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்படும்.

அறிவித்தல் - 2

இன்று சித்திர போட்டி நடைபெறும்.

அறிவித்தல் - 3

நாளை கோலப் போட்டி நடைபெறும்.

அறிவித்தல் - 4

நாளை மறுதினம் கதை சொல்லும் போட்டி நடைபெறும்.

அறிவித்தல் - 5

இன்று விடுகதைப் போட்டி நடைபெறும்.

அறிவித்தல் - 6

நாளை பரீட்சை நடைபெறும்.

அறிவித்தல் - 7

இன்று சிறுவர் நாடகம் இடம்பெறும்.

பின்வரும் அறிவித்தல்களை ஒழுங்குபடுத்தி வாசிப்போம்.

சிறுவர்	நாளை	தினம்	பாடசாலையில்	கொண்டாடப்படும்

.....

போட்டி	இன்று	நடைபெறும்	சித்திரப்

.....

கதை	இன்று	போட்டி	சொல்லும்	நடைபெறும்

.....

நடைபெறும்.	நாளை	பரீட்சை

.....

பின்வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுவோம்.

01.வ [ ] ப்பறை

02.கூ [ ]

03.க [ ] வு

04. பொ [ ] ட்கள்

05.இ [ ] ங்கள்

06.நடைபெ [ ] ம்

07.சித்தி [ ]

08.நா [ ]

09.சி [ ] வர்

10.இ [ ] று

02) அறிவுறுத்தல்களை வாசிப்போம்.



சரியாகக் கைளைக் கழுவுவதற்கான அறிவுறுத்தல்கள்

1. கைகளை நீரில் நனைத்துக்கொள்ளுங்கள்.
2. உள்ளங்கைகளில் சவர்க்காரத்தைப் பூசிக்கொள்ளுங்கள்.
3. உள்ளங்கைகளையும் விரல்களுக்கு இடையேயுள்ள இடைவெளிகளையும் மற்றயை கையின் உள்ளங்கையினாலும் விரல்களுக்கு இடையிலும் நன்றாகத் தேயுங்கள்.
4. கையை இறுக்கிப்பொத்தி, புறப்பகுதியை மற்றைய கையின் உள்ளங்கையினால் தேயுங்கள்.
5. பெருவிரலை மறு கையினால் நன்கு தேயுங்கள்.
6. விரல் நுனிகளையும் நகத்தையும் மற்றைய கையில் இருக்கும் சவர்க்கார நுரையினால் நன்கு தேயுங்கள்.
7. சுத்தமான நீரினால் கைகளில் இருக்கும் சவர்க்காரம் அற்றுப்போகும் வரை கழுவுங்கள்.
8. சுத்தமான துணியினால் கையைத் துடைத்துக் காயவிடுங்கள்.
9. அந்தத் துணியை தினமும் சவர்க்காரம் இட்டுக் கழுவி வெயிலில் காயவிடுங்கள்.

அறிவுறுத்தலில் வரும் சொற்களை எழுதி வாசிப்போம்

- கைகள்
- நீர்
- உள்ளங்கை
- சவர்க்காரம்
- விரல்கள்
- பெருவிரல்
- நகம்
- நுரை
- துணி
- வெயில்
- நுனி
- கை

பின்வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுவோம்.

01.கை ☐ ள்

02.வெ ☐ யில்

03.ந ☐ ம்

04.விரல ☐ ள்

05.சவ ☐ க்காரம்

06. உள்ள ☐ கை

07. நு ☐

08. ☐ ணி

ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுவோம்.

01. கை - ……..

02. விரல் - ……...

03. நகம் - ……...

04. துணி - ……

05. நுரை - ……

03) அறிவுறுத்தலை வாசிப்போம்

சுகாதாரப் பணியகத்தின் அறிவுறுத்தல்கள்.


- காலையிலும் மாலையிலும் பல்துலக்குதல் வேண்டும்.
- பல்லின் உள், வெளிப்பாகங்களை அவதானித்துத் துலக்குதல் வேண்டும்.
- வாயைச் சுத்தம் செய்யும் போது பல், முரசு, நாக்கு ஆகியவற்றைச் சுத்தம் செய்தல் வேண்டும்.
- இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக பழங்களை உண்பதே சிறந்தது.

விடுபட்ட எழுத்துக்களை எழுதுவோம்

01. து…..க்குதல் 02. வெ……ப்பாகங்கள்

03. மு….சு 04. ப…….டங்கள் 05. ப…..ங்கள்

04) ரோபோ போன்று பேசுவோம்.



ரோபோ	:	ரோபோ சிரித்துக் கொள்கிறார். (சிரியுங்கள்)
மாணவர்கள்	:	சிரிக்க வேண்டும்.
ரோபோ	:	ரோபோ துள்ளச் சொல்கிறார். (துள்ளுங்கள்)
மாணவர்கள்	:	துள்ள வேண்டும்.
ரோபோ	:	ரோபோ கைகளை உயர்த்தச் சொல்கிறார். (உயர்த்துங்கள்)
மாணவர்கள்	:	கைகளை உயர்த்த வேண்டும்.
ரோபோ	:	ரோபோ குனிந்து கால்களைக் கைகளால் தொடச் சொல்கிறார். (தொடுங்கள்)
மாணவர்கள்	:	கைகளால் கால்களைத் தொட வேண்டும்.
ரோபோ	:	ரோபோ பாடச் சொல்கிறார். (பாடுங்கள்)
மாணவர்கள்	:	பாடலொன்றைப் பாட வேண்டும். (விரும்பிய)
ரோபோ	:	ரோபோ கைகளைத் தட்டச் சொல்கிறார். (தட்டுங்கள்)
மாணவர்கள்	:	கைகளைத் தட்ட வேண்டும்.

ரோபோ இடும் கட்டளைகளை வாசிப்போம்.

- சிரியுங்கள்
- துள்ளுங்கள்
- உயர்த்துங்கள்
- தொடுங்கள்
- பாடுங்கள்
- தட்டுங்கள்

❖ **பின்வரும் சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை நிரப்புக.**

01. சிரி ☐ ங்கள்
02. துள் ☐ ங்கள்
03. உயர்த் ☐ ங்கள்
04. தொடு ☐ கள்
05. பா ☐ ங்கள்
06. தட் ☐ ங்கள்

❖ **ஒரே சொற்களை தொடர்புபடுத்துங்கள்.**

(அ)	(ஆ)
சிரியுங்கள்	தட்டுங்கள்
உயர்த்துங்கள்	துள்ளுங்கள்
துள்ளுங்கள்	பாடுங்கள்
பாடுங்கள்	உயர்த்துங்கள்
தட்டுங்கள்	சிரியுங்கள்

05) விடுகதைகளுக்கு விடையளிப்போம்.

01. கீழே வீசினால் மேலே வருவான். அவன் யார்? ……..
02. உயரப் உயரப் பறப்பான் அவன் யார்? ……...
03. ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம் அது என்ன? ……...
04. வயிறு நிறைந்தால் வானத்தில் பறப்பான் அவன் யார்? ……..
05. பச்சைப் பெட்டிக்குள் தங்கக் கட்டிகள் அது என்ன? ……...
06. சூரியன் பார்க்காத கிணறு. அதற்குள் சுவையான தண்ணீர். அது என்ன? …….
07. உணவை எடுப்பான். ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்? ……
08. இதயம் போல் துடிப்பிருக்கும். இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன? ……..
09. உரிக்க உரிக்கத் தோல் அது என்ன? …….
10. வெள்ளை மனிதனுக்கு கறுப்புத் தொப்பி அது என்ன? ……...
11. நாலுகால் உண்டு நடக்கத் தெரியாது அவன் யார்? ……..
12. மழையில் நனைவேன், வெயிலில் காய்வேன். வெளியில் விரிவேன். வீட்டில் சுருங்குவேன். நான் யார்? …….

13. தூய்மையானால் கறுப்பாவேன். அழுக்கானால் வெள்ளையாவேன். நான் யார்? .....
14. பல் இருக்கும் கடிக்காது அது என்ன? .....
15. உருளுது, புரளுது, தத்தளிக்கிறது, தாளம் போடுது அது என்ன? .....
16. சுடுபட்டுச் சிவந்தவன், வீடு கட்ட உதவுவான். அவன் யார்? .....
17. இரவு முழுவதும் வெளிச்சம் விடிந்து பார்த்தால் அவனைக் காணவில்லை அவன் யார்? .....
18. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன பூ? .....
19. செம்பு நிறைய சிவப்பு முத்து. அது என்ன? .....
20. அழுதழுது ஒளிதருவான். அவன் யார்? .....
21. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன? .....
22. கூவி அழைப்பான். கூடி உண்பான். கொத்திப் பறப்பான் அவன் யார்? .....
23. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன? .....
24. தாய் குப்பையிலே மகள் சந்தையிலே அவள் யார்? .....
25. அவனுக்கு வீடு, மற்றவருக்கு வலை அது என்ன? .....
26. பகலெல்லாம் ஊரைச் சுற்றவான். இரவில் கதவோரம் காத்துக் கிடப்பான் அவன் யார்? .....
27. தலையைச் சீவினால் நாக்கை நீட்டுவான் அவன் யார்? .....
28. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை அது யார்? .....
29. வெளிச்சத்தில் தொடர்வான் இருட்டில் மறைந்திருவான் அவன் யார்? .....
30. வீடு வாசல் காப்பான். விசுவாசமானவன். குரைக்கவும் மாட்டான். கடிக்கவும் மாட்டான். கதவோரம் ஒட்டிக் கிடப்பான். அவன் யார்? .....

பலூன், கரண்டி, இளநீர், நாக்கு, காகம், சிலந்தி வலை, பட்டம், சீப்பு, பந்து, வெங்காயம், கரும்பலகை, பட்டம், முட்டை, சிரிப்பு, சீப்பு, நிலா, மாதுளம்பழம், முட்டை, பலாப்பழம், கடிகாரம், வாழைப்பழம், தீக்குச்சி, பென்சில், கதிரை, செருப்பு, குடை, பூட்டு, செங்கல், நிழல்

பின்வரும் விடுகதைக்குரிய விடைகளை கண்டுபிடியுங்கள்.

1. மேலே எறிந்தால் கீழே வருவான், தரையில் போட்டால் மேலே போவான் அவன் யார்?

2. ஆடியாடி நடப்பான் அகிலம் அதிர நடப்பான் அவன் யார்?

3. பற்கள் உண்டு ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன?

4. நீரிலே நீந்திவரும் தரையிலே தாவிவரும் அது என்ன?

5. உடல் முழுதும் காற்று ஆனால் சுவாசிக்க மாட்டான் அவன் யார்?

6. கையளவு உடம்புக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?


7. உயிரற்ற பறவை ஊரூராய்ப் பறக்கும் அது என்ன?

8. மீன்பிடிக்கத் தெரியாது ஆனால் வலை பின்னுவான் அவன் யார்?

9. கோபத்திற்கு வாயைக் காட்டுவான்; நன்றிக்கு வாலைக் காட்டுவான் அவன் யார்?

10. நனைந்தாலும் நடுங்கமாட்டான் அவன் யார்?

விடுகதைகளின் விடைக்குரிய பட அட்டைகள்



06) தகவல்களை செவிமடுத்து பரிமாறுவோம்.

- இன்று மழை பெய்யும்.
- தம்பி நன்றாக வரைவான்.
- மாமா வீட்டிற்கு வந்தார்.
- அதிபர் என்னைப் பாராட்டினார்.
- அம்மா கோயிலுக்குப் போனார்.
- கிளி மரத்தில் இருந்தது.
- அவன் பாடம் படித்தான்.
- பசு பால் தரும்.

பயிற்சி

தரப்பட்ட சொற்களைக் கொண்டு வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புங்கள்.

மழை	தம்பி	பாடம்	அதிபர்	பால்	கிளி	வந்தார்	போனார்

01. ..... நன்றாக வரைவான்.
02. பசு ..... தரும்.
03. ..... என்னைப் பாராட்டினார்.
04. இன்று ..... பெய்தது.
05. ..... மரத்தில் இருந்தது.
06. அம்மா கோயிலுக்கு .....
07. அவன் ..... படித்தான்.
08. மாமா வீட்டிற்கு .....

07) சுய விபரத்தை படிவத்தை நிரப்புவோம்.

சுய விபரப் படிவம்

மாணவரின் படம்

மாணவர் பெயர் : .....

கற்கும் வகுப்பு : .....

வயது : .....

வீட்டு முகவரி : .....

.....

பெற்றோரின் கையொப்பம்

08) பாடநூலிலுள்ள "சித்திரைப் புத்தாண்டு" எனும் பாடத்தை வாசித்து விடை எழுதுவோம்.

01. புத்தாண்டு என்ன மாதத்தில் வரும்? .....

02. நாம் அதனை எவ்வாறு அழைப்போம்? .....

03. புத்தாண்டில் யார் யார் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவர்?

.....

04. புத்தாண்டில் செய்யும் வேலைகள் இரண்டு தருக?

....

05. புத்தாண்டில் பரிமாறப்படும் உணவுகள் எவை?


.....

06. எப்போது விளையாடுவர்? .....



09) பின்வரும் படக்கதையைப் பார்த்து கதை கூறுவோம்.


ஆமையும் முயலும்




நரி குகை ஒன்றுக்குள் முயல் இருப்பதைக் கண்டது.




அதனைப் பிடிக்க முயலுக்கு அருகில் சென்றது.




முயல் துள்ளிப் பாய்ந்து ஓடியது.



வழியில் மானைக் கண்டது. தனக்கு உதவி செய்யுமாறு கேட்டது. மான் மறுத்துவிட்டது.



அப்போது அங்கே ஒரு கழுதையைக் கண்டது. கழுதையிடம் தன்னைக் காப்பாற்றுமாறு மன்றாடியது கழுதையும் மறுத்துவிட்டது.



என்ன செய்வதென முயலுக்குத் தெரியவில்லை. அப்போது ஒரு யானை வருவதைக் கண்டது. யானையிடம் உதவி கேட்டது. அதே நேரம் நரியும் அவ்விடத்திற்கு வந்தது.

படக்கதையை வாசித்து அதில் வரும் பிராணிகளின் பெயர்களை எழுதுவோம்.

.....

.....

.....

.....

.....

படக்கதையை வாசித்து வினாக்களுக்கு விடையளிப்போம்.

01. நரி முயலை எங்கே கண்டது? .....

02. முயல் யாரிடம் முதலில் உதவி கேட்டது? .....

03. இரண்டாவதாக யாரிடம் உதவி கேட்டது? .....

04. மூன்றாவதாக யாரிடம் கேட்டது? .....

இடைவெளி நிரப்புவோம்.

01. முயல் ..... ஓடியது.

02. அங்கே ஓர் ..... கண்டது.

03. அதனைப் பிடிக்க .....அருகில் சென்றது.

04. நரி குகை ஒன்றுக்குள் ..... இருப்பதைக் கண்டது.

05. தனக்கு ..... செய்யுமாறு கேட்டது.

06. அப்போது ஒரு ..... வருவதைக் கண்டது.

07. மான் .....

08. அதே நேரம் ..... அவ்விடத்திற்கு வந்தது.

10) "குணங்கள்" எனும் பாடத்தை வாசித்து பின்வரும் பிராணிகளின் குணங்களை எழுதுவோம்.

01. 

…….....

……..…….

02. 

…….....

……..…….

03. 

…….....

……..…….

04. 

…….....

……..…….

05. 

…….....

……..…….

06.  .....

.....

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

01. பாலைத்தரும் சாதுவான பிராணி எது? .....
02. வீட்டைக்காக்கும் நன்றியுள்ள மிருகம் எது? .....
03. கம்பளியும் பாலும் தரும் பிராணி எது? .....
04. காலைப்பொழுதில் கூவும் பிராணி எது? .....
05. எலி பிடிக்கும் பிராணி எது? .....
06. உற்றார் அனைவரையும் அழைத்து உண்ணும் பிராணி எது? .....

பொருத்தமானதை இணைப்போம்.

01.	நன்றியுள்ள மிருகம்	சேவல்
02.	சாதுவான பிராணி	காகம்
03.	கழுத்தை நீட்டிக் கூவும்	நாய்
04.	பஞ்சுக்கால் உள்ளது	பசு
05.	கூடி உண்பது	பூனை

11) கதையை கிரகிப்போம்.

காட்டிற்கு ராஜா யார்?

அது ஒரு பெரிய காடு. அந்தக் காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் நரி ஒன்று வேகமாக ஓடி வந்தது. இதைக் குளவி ஒன்று கண்டது. ஏன் ஓடி வருகிறாய்? என்று குளவி கேட்டது. அதற்கு நரி ''சத்தம் போடாதே'' ராஜா வருகிறார். எங்களைக் கண்டால் கொன்றுவிடுவார் என்றது. காட்டு ராஜாவா? யார் அவரை ராஜாவாக்கியது? என்று குளவி கேட்டது. நரி பயந்து நடுங்கியது. அப்போது மிருகங்கள் ஒன்று கூடின.

அங்கு வந்த சிங்கம் ''இங்கே என்ன சத்தம்'' எனக் கேட்டது. அதற்கு நரி தந்திரமாகப் பதிலளித்தது. ''இந்தக் குளவி சிங்கத்தைக் காட்டு ராஜாவாக ஏற்கமுடியாது என்று கூறுகிறது'' என்றது. நரியாரே! அப்படியா குளவி கூறியது எனச் சிங்கம் கேட்க, அதற்கு நரி ''ஆம் அரசே'' எனப் பதிலளித்தது. சிங்கம் கர்ஜித்தது.

உடனே குளவி ''நீங்கள் என்னுடன் சண்டையிட்டு வெல்லுங்கள் பார்ப்போம். வென்றால் நீங்கள்தான் ராஜா என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்'' என்று சவால் விட்டது.

வேறு வழியின்றி சிங்கமும் சம்மதித்தது. குகைக்கு வெளியே சண்டை ஆரம்பமானது. சற்றும் எதிர்பாராத சமயத்தில் சிங்கத்தின் மூக்கில் குளவி ''டொக்'' என்று கொட்டியது. சிங்கத்தால் வலி தாங்க முடியவில்லை. தோற்று அவ்விடத்தைவிட்டு ஓடியது.

மற்றைய மிருகங்கள் துள்ளிக்குதித்தன. குளவியைப் பாராட்டின. குளவி ரீங்காரமிட்டபடி பறந்து சென்றது.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

01. நரியார் ஏன் ஓடி வந்தார்? .....

02. ''ஏன் ஓடி வருகிறாய்'' எனக் கேட்டது எது? .....

03. சிங்கம் சண்டையிட்டு வென்றதா? .....

04. குளவி சிங்கத்தின் எதில் கொட்டியது? .....

05. சிங்கத்தை ராஜாவாக ஏற்க மறுத்தது எது? .....

